★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 19உ வெள்ளி (3—8—56) ★ ★ வெளியீடு: ஆடி 20உ சனி (4—8—56) [இதழ் 46

உலக மக்கள் தொகை அதிகரிக்கிறது!

கடைசியாகக் கிடைத்துள்ள இன்றைய மதிப்புப்படி உலக மக்கள் தொகை 265,20,00,000 ஆகும் என 'யுனெஸ்கோ' கூறுகிறது.

இது 1954-ம் ஆண்டிற்குரிய தொகை; இது 1953-ம் ஆண்டுத் தொகையைவிட 15,90,00,000 கூடுதலாகும்.

'சமதர்ம இலக்கணம்' தடம் மாறுகிறது!

'எல்லோரும் சமம்' என்பது சாத்தியப்படாது?

மத்திய-மாநில சர்க்கார் ஊழியர் சம்பள வித்தியாசத்தில் டில்லி தலையிடாதாம்!

புதுடில்லி, ஆக. 2—

"மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும்—மாநில சர்க்கார் ஊழியர்களுக்குமிடையே காணப்படும் ஊதிய வேறுபாடுகளைப் பொறுத்த பிரச்சினையில் மத்திய சர்க்கார் எதுவும் செய்வதற்கில்லை"

என்று, மக்கள் சபையில், மத்திய உள்நாட்டமைச்சர் பி. என். தத்தார் அறிவித்திருக்கிறார்.

"கடந்த ஜூன் திங்களில், என். ஜி ஓ.-க்களின் அதுக் குழு விடுத்த வேண்டுகோள் மீது மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது?"

என்று, புபேஷ் குப்தா என்ற உறுப்பினர் ஒருவர் கேள்விக்குப் பதிலளிக்கையில்தான் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"சென்னை மாநிலத்தைச் சேர்ந்த என் ஜி ஓ-க்களின் அதுக் குழு ஒன்று கடந்த ஜூன் திங்களில பிரதமரைப் பேட்டி காண டில்லிக்கு வந்தது; ஆனால், மாநில சர்க்கார் ஊழியர்களின் ஊதிய விவகாரத்தில் தாங்கள் தலையிடுவதற்கில்லை என்ற காரணத்தால், அவர்களுக்கு பிரதமரின் பேட்டி மறுக்கப்பட்டது என்ற தகவலையும் அவர் தந்திருக்கிறார்.

மத்திய—மாநில சர்க்கார் ஊழியர்களிடை காணப்படும் ஊதிய வேறுபாடுகளின் காரணமாக, அவர்களுடைய 'தகுதி'யில் காணப்பெறும் இழிதன்மையை, எச். சி. தாசப்பா என்பார் சுட்டிக் காட்டினார்.

அமைச்சர் தத்தார் பதில் கூறுகையில், அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்துவருவதாகக் கூறப்படுவதை ஒப்புக் கொள்ளமுடியாது என்றும், அப்படியே ஏதேனும் இழிநிலை காணப்படுவதாக வைத்துக் கொண்டாலும்கூட, அந்த விஷயத்தை சென்னை மாநில சர்க்காரே முடிவு செய்ய வேண்டியதுதான் என்றும் கூறியிருக்கிறார்.

"மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட ஊதிய உயர்வினால் தானே இந்த வேறுபாடு ஏற்பட்டதற்குக் காரணம்?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், இந்த பிரச்சினை கடந்த 1946-லேயே பரிசீலிக்கப்பட்டு, ஒரு மத்திய ஊதிய நிர்ணயக் குழு நியமிக்கப் பட்டதென்றும் அதன் பின்னர். 1947-ல் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கான ஊதியம் குறித்து சர்க்கார் ஒரு முடிவை மேற்கொண்டது என்றும், அன்று முதல் இன்றுவரை மத்திய சர்க்கார் ஊழியர்களின் ஊதியவிகிதம் மாறுபடாமல் அப்படியே இருந்து வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

"பலதிறப்பட்ட மாநிலங்களின் பொருளாதர நிலையைப் பொறுத்துத்தான் சர்க்கார் ஊழியர்களுக்கான ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது; மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத்தரப்படும் ஊதியத்தைப் போலவே தங்கள் ஊழியர்களுக்கும் சரிசமமாக ஊதியம் கொடுக்க முடியுமா என்பதை அந்தந்த மாநிலங்களின் சர்க்கார்கள்தான் முடிவு செய்யவேண்டும்; மத்திய சர்க்கார், இவ்விஷயத்தில் மாநில சர்க்கார்களை எவ்விதத்திலும் நிர்ப்பந்தப் படுத்துவதற்கில்லை," என்றும் அமைச்சர் கூறினார்.

1955-ல் இந்தியாவில் ரூ 33 59 960 மதிப்புள்ள சிமெண்டுத் தயாரிப்பு இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன

சென்னையின் கோரிக்கைக்கு டில்லி சர்க்கார் பதில் என்ன?

பண்டித பந்த் அறிக்கை சென்னை - ஆந்திரா எல்லைத் தகராறுக்குப் பொருந்துமா?

சென்னை, ஆக 2—

சென்னை—ஆந்திரா மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைத் தகராறு தற்போதைய மாநில சீரமைப்புத் திட்டத்தின் விளைவாக ஏற்பட்டதில்லை என்றும், அது பழைய தகராறே என்றும், எனவே இந்த எல்லைத் தகராறு முற்றிலும் வேறு 'தன்மை' வாய்ந்தது என்றும் சென்னை சர்க்கார் கருதுகின்றனராம்.

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறைத் தீர்க்க எல்லைக் குழு நியமிக்குமாறு சென்னை சர்க்கார் கேட்டிருந்ததற்கு மத்திய சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை.

எல்லைக் குழு அமைப்பை எதிர்த்து மக்கள்சபையில் உள்நாட்டிலாகா மந்திரி வெளியிட்ட அறிக்கை, சென்னை — ஆந்திர மாநில எல்லைத் தகராறுக்கும் பொருந்துமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

'நேருவைப் போன்று மற்றவர்கள் பெரிய மனிதர்களாக இருக்கவில்லை'

பண்டிதரின் ஆட்சியில் 'மக்களாட்சி' படும்பாடு குறித்து சி. டி. தேஷ்முக்!

புதுடில்லி, ஆக. 3—

"கடந்த ஜனவரி 10-ந் தேதியோ அல்லது 11-ந் தேதியோ நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் பம்பாய் நகரம் ஒரு தனி மாநிலமாக இருக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது; ஆனால் ஜனவரி 16 ல், பிரதமர் நேரு, 'பம்பாய் நகரம் மத்திய சர்க்காரின் நேரடி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்' என்று அறிவித்தார். இதற்கிடையில், மந்திரி சபைக் கூட்டம் எதுவுமே நடைபெறவுமில்லை; மந்திரி சபைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்படவுமில்லை; மந்திரி சபையிலுள்ள எந்தக் குழுவுக்கும், இந்த முடிவை மேற்கொள்ளுவதற்கு அதிகாரம் வழங்கப்படவுமில்லை.

"கடந்த ஜூன் 3-ந் தேதியன்று பிரதமர் நேரு, மற்ற சக மந்திரிகளைக் கலந்து பேசாமலேயே தம்முடைய முடிவைத் தெரிவித்ததைப் போலவே இதையும் ஒரு முக்கியமான பிரச்சினையாகக் கருதுகிறேன்.

"பிரதமர் நேருவின் தலைமையை நான் நம்பவில்லை என்பதற்காக அல்ல இதைக் கூறுவது; இன்னும்கூட அவரே எல்லாவற்றையும் முடிவு செய்யட்டும் என்றுதான் கூறுவேன்; ஆனால், நாம் மேலை நாடுகளைப் போன்ற சனநாயகத்துவத்தைக் கடைப்பிடித்து வருகிறோம்; அந்த சனநாயக முறைகள் அனைத்தும் ஒழுங்கான முறையில், பாராளுமன்றத்தின் மூலமாகவே கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற கடமையை நான் உணருகிறேன். எனவே இப்பிரச்சினையில் கூட்டாலோசனை நடைபெற்றதாகவோ அதன் பின்னர் பிரதமரும் அவருடன் மற்றும் ஒன்றிரண்டு சக அமைச்சர்களும் சேர்ந்து முடிவு செய்ததாகவோ கூறப்படுவதை ஒத்துக்கொள்ள முடியாது. இந்த முடிவை பிரதமர் மட்டுமே மேற்கொண்டிருந்தால்கூட நான் அதுபற்றிக் கவலைப்பட்டிருக்கமாட்டேன். ஆனால் மந்திரி சபையில் ஒன்றிரண்டு பேர் மட்டும் கூடிக் கலந்தாலோசித்து இவ்விதம் முடிவு செய்வதானது தீயன பயப்பதாகும். இதுபோலவேதான் மற்றும் பல மாநிலங்களிலும் நடைபெற்று வருகிறதென்பதையும் நான் அறிவேன்.

"சனநாயகத்தின் பேரால் நடைபெறும் இப்படிப்பட்ட செய்கைகள் மோசமான சூழ்நிலையைத்தான் உருவாக்கும். ஏனென்றால், பொறுப்பான இடங்களிலுள்ள மற்றவர்கள் எல்லாம் நேருவைப்போன்று பெரிய மனிதர்களாக இருக்கவில்லை."

இவ்வாறு, முன்னாள் நிதியமைச்சர் தேஷ்முக் அவர்கள் — 'பம்பாயின் எதிர்காலம் குறித்து அமைச்சரவையில் கூட்டாலோசனை நடைபெற்றது' என்று உள்நாட்டமைச்சர் கூறியதை மறுத்து, மக்கள் சபையில் மீண்டும் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'மூன்று மாநில ஏற்பாடுகள் குறித்துச் சர்க்காரின் முடிவுகள் வெளியான பின்னர்தான் தேஷ்முக் அவர்கள் பதவி விலகல் செய்தார்' என்று உள்நாட்டமைச்சர் கூறியதை மறுத்து தேஷ்முக் பேசுகையில், "அப்படிப்பட்ட பிரசுரங்கள் எதும் வெளியிடப்படவில்லையாதலால் உள்நாட்டமைச்சர் கூறுவது சரியல்ல; வெளியிடப்பட்ட கருத்தெல்லாம், பம்பாய் நகரை மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டும் என்ற முடிவுதான்" என்று குறிப்பிட்டார்.

மந்திரி சபையின் துணைக்குழுவில் தேஷ்முக் அவர்களும் சேர்ந்திருந்ததாக உள்நாட்டமைச்சர் கூறியதை மறுத்து, தேஷ்முக் பேசுகையில், "உள்நாட்டு அமைச்சர் தவறானதோர் கருத்தைக் கிளப்புகிறார்; நான் சிற்சில துணைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டுதானிருக்கிறேன்; ஆனால், அந்தக் கூட்டங்களெல்லாம் எல்லைத் தகராறுகள் சம்பந்தப்பட்டவைகளாகவே இருந்தன; பம்பாய் குறித்து விவாதம் நடத்திய எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொண்டதில்லை" என்று குறிப்பிட்டார்.

இரயில் பிரயாணத்தில் வடவர் தரும் தொல்லையின் எதிரொலி

'அபாயச் சங்கிலி'களை அதிகாரிகள் அகற்றிவிட்டனராம்!

மக்கள் சபையில் பாராளுமன்றச் செயலாளர் தகவல்

புதுடில்லி, ஆக. 2—

"இரயில் தொடர்களில் பொருத்தப்பட்டிருக்கும் 'அபாயச் சங்கிலி'களை அனாவசியமாகவும், அடிக்கடியும் உபயோகித்து பிரயாணிகள், இரயில் பிரயாணத்திற்குத் தொந்தரவு கொடுத்து வருவதையொட்டி, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்குஇரயில்வேக்களில் சில குறிப்பிட்ட இரயில் வண்டித் தொடர்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 'அபாயச் சங்கிலி'யை அகற்றிவிட்டிருக்கின்றனர்,"

என்ற தகவலை மக்கள் சபையில், இரயில்வே இலாகா பாராளுமன்றச் செயலாளர் ஷா நவாஸ்கான் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிலுள்ள ஒரே ஒரு குறை!

"படித்தவர்களுக்குத் தகுந்த வேலை இல்லாததுதான், இந்தியாவில் உள்ள ஒரு பெரிய குறையாகும்,"

என்று, அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜி. எல். மேத்தா கூறியுள்ளார்.

நண்பர் இராமசாமி அவர்களின் மலேயா செலவு

விமான நிலையத்தில் விழாக் காட்சி

சென்னை, ஆக. 3—

அறிவித்திருந்தபடியே நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தமது நாடகக் குழுவுடன், காலை 10-45 மணிக்கு மீனம்பாக்கத்திலிருந்து விமான மூலம் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

என்றும் காணாத வகையில் விமான நிலையம் இன்று ஒரு விழா காட்சி அளித்தது.

பொதுச்செயலாளர் உள்ளிட்டு கழக முக்கியஸ்தர்கள் பலரும், நாடகக் கலைஞர்களும், மற்றும் நெருங்கிய நண்பர்களும் நடிப்பிசைப் புலவர் அவர்களுக்கு மலர்மாலை அணிவித்து மகிழ்ச்சியுடன் வழி அனுப்பிவைத்தனர்.

(முழு விவரம் நாளை வெளிவரும்.)

நம் நாடு

திமுக தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3-8-'56 வெள்ளி

ஆச்சாரியார் 'நல்லாட்சி'!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், ஏகாதிபத்திய ஆட்சியை நல்லாட்சி என பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் மட்டுமே கூறிவரவில்லை. இந்தியத் துணைக்கண்ட வரலாற்று அறிவு சிறிதளவு பெற்றிருந்த உள்நாட்டவர்களும்தான் அவ்வாறு சிறப்பித்துக் கூறிவந்தனர்.

அவ்வகையில் தங்கள் ஆட்சியை உயர்த்திக் கூறிக்கொண்ட பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தை அதிகார வெறியர்கள் எனவும் ஏகாதிபத்திய மூர்க்கர்கள் எனவும், இத்துணைக்கண்டத்தில் சிலர் கூறத் தொடங்கினர். ஏகாதிபத்திய ஆட்சியை உயர்த்திப் பேசிய உள்நாட்டவர்களை ஏகாதிபத்திய அடிவருடிகள், எடுபிடிகள், தாசானுதாசர்கள் என இழித்துப் பழித்து இங்குள்ளார் சிலர் தூற்றத் தொடங்கினர். அவ்வாறு இழிவாகவும் கீழ்த்தரமாகவும் பேசிவந்த ஒன்றே சிலரை பெருத்த நாட்டுப் பற்றுடையவர்களாக ஆக்கி இருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியை நல்லாட்சியாகக் கற்றறிந்தவர் கூறத் தொடங்கியதற்குக் காரணமே, இந்திய வரலாற்றில் காணப்பெற்ற கொடுங்கோலாட்சிகளும், அக்கிரம நிர்வாக முறைகளுமேயாகும். தீமையில் குறைந்திருப்பது—கேடு பயப்பதில் மிதமாக இருப்பது என்ற கருத்தில்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை நல்லறிவாளர்கள் சிலர் வரவேற்கத் தொடங்கினர்.

அன்றைய உள்நாட்டு ஆட்சித் துறையில் மலிந்து கிடந்த ஒழுக்கக் கேடுகளும், பகையும் போட்டியும், கொலைக் கஞ்சா கொடுமைகளும் குலத்துக்கொரு நீதி வழங்கிய கோணல் போக்கும், ஏகாதிபத்திய ஆட்சியை இத்துணைக் கண்டத்தில் நிலைபெறச் செய்துவிட்டது. ஒரு ஆட்சிக்கு இருந்துத் தீரவேண்டிய அளவில், உள்நாட்டு மக்களின் ஆதரவு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்கு இருக்கத்தான் செய்தது. பெரும்பான்மையினர் எவன் ஆண்டால் என்ன என்ற மனப்போக்கில், ஏகாதிபத்திய ஆட்சி குறித்துப் பாராமுகமாகவும் இருந்து வந்தனர்.

உள்நாட்டில் நடைபெற்று வந்த மணிமுடிதாங்கிகளின் முறையைக் காட்டிலும் ஏகாதிபத்திய ஆட்சிமுறை கொடுமையில் குறைந்து காணப்பட்டதாலும், சம நீதி வழங்குவதில் சிறிதளவு முற்போக்காக இருந்து வந்ததாலும், மக்களின் ஆதரவு அதற்கு சாதகமாகத் திரண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி நீண்டகாலம் வரை நீடித்து வந்தமைக்கு, இவ்வகையில் தான் அறிவியல் பூர்வமாக விடை இறுக்க முடியும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத் தொடங்கிய காலத்தில், சுயாட்சி முழக்கம் துவக்கப்பட்ட நேரத்தில், ஏகாதிபத்திய ஆட்சி எத்தகைய நலம் பயக்கக்கூடியதாக இருந்தபோதிலும் சுயாட்சிக்கு அது ஈடாகாது என வாதிக்கப்பட்டது. அவ்வாறு வாதித்த சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள்தான் இன்று, சுயாட்சி நல்லாட்சிக்கு மாற்று ஆகாது எனப் பேசக் கிளம்பியுள்ளனர்.

"சுதந்திரம் கிடைத்துவிட்ட பிறகு நல்லாட்சிக்குள்ள முக்கியத்துவம் தீர்ந்துவிடவில்லை. நல்லாட்சியை அடைவதுதான் எல்லா ஆட்சிக்கும் உள்ள விழுமிய இலட்சியமாகும். ஒரு குடியரசில் நல்லாட்சியின் தேவையாக இருப்பவை, நல்ல சட்ட சபையினர், அடியிலிருந்து நுனிவரை பணியாற்றும் நல்ல அரசாங்க ஊழியர்கள், நல்ல நீதிபதிகளுமாகும். ஆட்சிபுரிய நல்ல சட்டசபையினர், நீதிபதிகள், அரசாங்க ஊழியர்கள் முதலியவர்களை நாம் பெற்றிருந்தால் அல்லாது நம்மால் நல்லாட்சியைப் பெற முடியாது."

இவ்வாறு, ஆச்சாரியார் நல்லாட்சிக்கு இலட்சணம் கூறி இருக்கிறார்.

நல்லாட்சிக்கு ஆச்சாரியார் அவர்கள் கூறிய இலட்சணம் நமக்கு உடன்பாடு உடையதே யாகும். அவ்விலட்சியம் செயல்பட வேண்டும் என்பதில் ஆச்சாரியாரைவிட நமது கழகத்திற்கு அதிக ஆசையும் அக்கரையும் உண்டு. நம் கழகம் மேற்கொண்டுள்ள அரசியல் முயற்சியில் பெரும் பகுதி, ஆச்சாரியார் நடைமுறையில் காண விரும்பும் 'நல்லாட்சியை' பலம் பொருந்திய கடைக்காலின் மேல் நிர்மாணிக்க வேண்டும் என்பதிலேயே செலவழிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், 'நல்லாட்சி' இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவர விழையும் ஆச்சாரியாரோ, நாம் விழையும் அந்த உயர்ந்த 'நல்லாட்சி'யை மக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் உருவாக்கும் நினைப்புடையவராகக் காணோம். அந்த இடத்தில்தான் நாமும ஆச்சாரியாரும் பிரிந்து வெவ்வேறு பாதையைத் தேடிச் செல்ல வேண்டியவர்களாகிறோம். அதாவது, அத்துறையில் அவர் கருத்துக்கும் நமது கருத்துக்கும் உள்ள பிளவு — தூரம் — வடதுருவத்திற்கும் தென்துருவத்திற்கும் உள்ளதுபோல் இருக்கிறது.

ஆச்சாரியார் காண விரும்பும் 'நல்லாட்சி' மக்களுக்காக நடத்தப்பெறும் மக்களாட்சியாகும். அவருடைய இலட்சிய 'நல்லாட்சி'க்கு மக்கள் ஒப்புதலும் தேவை இல்லை.

நாம் உருவாக்க விரும்பும் 'நல்லாட்சி' மக்களால், மக்களுக்காக நடத்தப்பெறும் மக்களாட்சியாகும். நாம் விரும்பும் ஆட்சியில் மக்களின் ஒப்புதலுக்கும் ஒழித்தலுக்கும் வாய்ப்பு இருக்கும்.

மக்களின் விருப்பு-வெறுப்புகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெறக்கூடிய நல்லாட்சி'யை நாம் காண விழைகிறோம்.

ஆனால், ஆச்சாரியார் அவர்களோ, மக்களின் விருப்பு—வெறுப்புகளுக்குக் கட்டுப்படாதவகையில் நடைபெறக் கூடிய 'நல்லாட்சி'யை நிர்மாணிக்க விழைகிறார்.

நாம் தனி மனிதனின் 'ஆட்சி உரிமை'யே எந்த 'நல்லாட்சி'க்கும் அடிப்படையாக இருக்க வேண்டும் என உறுதி பூண்டிருக்கிறோம்.

ஆச்சாரியாரோ, அந்தத் தனி மனிதனின் 'ஆட்சி உரிமை'யை ஒழித்துவிட்டு 'நல்லாட்சி'யை உருவாக்கத் திட்டமிடுகிறார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாக உள்ள 'ஆட்சி உரிமை'யை 'நல்லாட்சி' என்ற கவர்ச்சியான சொல்லால் பறிமுதல் செய்ய ஆச்சாரியார் ஆசை கொள்ளுகிறார்.

தனி மனிதனின் 'ஆட்சி உரிமை'யை ஏற்க மறுக்கும் எந்த ஒரு ஆட்சியும் 'நல்லாட்சி'யாக இருக்க முடியாது. அது வெறும் மக்கள் பேரால் 'நல்லவர்கள்' எனத் தங்களுக்குத் தாங்களே பீத்திக்கொள்ளுகிற ஆச்சாரியார் போன்ற 'சாதி கர்வம்' கொண்ட சிலரால் நடத்தப்பெறும் சர்வாதிகார ஆட்சியேயாகும்.

ஏகாதிபத்திய ஆட்சி நல்லாட்சியாக இருந்தாலும், அது சுயாட்சிக்கு எப்படி ஈடாகாதோ அதுபோன்றே'நல்லாட்சி' எனக் கூறப்படுவதானாலும், அது, மக்கள் கருத்தறிந்து செயல்பட மறுக்குமானால், கண்டிப்பாக மக்களாட்சிக்கு மாற்று ஆகாது.

'நல்லாட்சி' கட்டாயத் தேவையாகும். ஆனால், அது மக்களாட்சியிலிருந்து மலர்ந்து மணம் வீசுவதாக அமைய வேண்டும். ஆச்சாரியார் 'நல்லாட்சி' பற்றி மேலும் நாளை ஆராய்ந்து எழுதுவோம்.

எவ்வித ஆதரவையும் பெற முடியாதாம்!

இலங்கை பெடரல் கட்சித் தூதுக் குழு பற்றி பண்டாரநாயகா

கொழும்பு, ஆக. 1—

"இலங்கையின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக தமிழ்மொழி இருக்கவேண்டுமென்று கோரும் தனது கொள்கைக்கு ஆதரவு தேடுவதற்காக இந்தியா சென்றிருக்கும் இலங்கை பெடரல் கட்சித் தூதுக் குழு, இந்திய சர்க்காரிடமிருந்து எவ்வித ஆதரவையும் பெறமுடியாது; இனிமேலும் பெறமுடியாது," என்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா அறிவித்திருக்கிறார்.

"இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை, தாங்கள் எந்தவகையிலும் தலையிடுவதற்கில்லையாதலால், பெடரல் கட்சிக்குத் தாங்கள் ஆக்கம் தரப்போவதில்லை என்று இந்திய மத்திய சர்க்காரைப்போலவே சென்னை மாநில சர்க்காரும் எனக்கு உறுதி அளித்திருக்கிறது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென்னாட்டில் நிறுவப்படும் மத்திய சர்க்கார் அச்சுக்கூடம்

1,000 பேர் பணியாற்றுவராம்

தென்னாட்டில் நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ள மத்திய சர்க்கார் அச்சுக்கூடத்தை, எந்த இடத்தில் நிறுவுவதென இன்னும் முடிவு செய்யப்படவில்லையாம்.

மத்திய சர்க்கார் அதிகாரி ஒருவர், கோவை—பெரியநாயக்கன் பாளையத்திற்கு வடக்கே 127 ஏகரா நிலத்தை, இதற்காகப் பார்வையிட்டுள்ளனாராம்.

அச்சகத்தில் ஆயிரம்பேர் பணியாற்றுவர் என்றும், அச்சகத்தை ஒட்டினாற்போல் பணியாளர்களின் குடும்பங்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படுமென்றும் தெரிகிறது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க முதற் கட்ட வேலைகள் ஆரம்பம்

ரூபாய் 1·46 கோடிக்கு இயந்திரச் சாதனங்கள் தருவிக்கப்படுமாம்

புதுடில்லி, ஆக. 1—

வெளியிடங்களிலிருந்து இயந்திரச் சாமான்கள், மற்றும் பொருட்கள் முதலியனவற்றிற்கு மத்திய உற்பத்தி இலாகா ஆர்டர்கள் செய்திருப்பதின் மூலம், சென்னை மாநிலத்தில் தென் ஆற்காட்டில் ரூ. 69 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வேலைகளுக்கான முதல் கட்ட வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்று பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

'வருகிற சில மாதங்களில், நிலக்கரிச் சுரங்கத்திற்குத் தேவையான ரூ. 1,46,00,000 பெறுமான இயந்திரச் சாதனங்கள் அனைத்தும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையிலும் நெய்வேலியில் நடைபெற்ற பலவித முதற்படி ஆராய்ச்சிகள் முடிவுற்றதின் பேரிலேயே நிலக்கரிச் சுரங்க முதற் கட்ட வேலைகள் துவக்கப்படுகின்றன என்றும், நடைபெற்ற ஆராய்ச்சிகள்—சிக்கனமான முறையில் 'லிக்னைட்' அங்கு தோண்டி எடுப்பது சுலபமே என்பதையும், அந்த 'லிக்னைட்'டை மின்சார உற்பத்தி, உர உற்பத்தித் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்துவது சாத்தியமே என்பதையும் தெளிவாக்கியிருக்கின்றன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நெய்வேலி நிலக்கரித் திட்டத்தில், ஆண்டொன்றுக்கு 35,00,000 டன் 'லிக்னைட்' தோண்டி எடுக்க முடியும். இந்த 'லிக்னைட்' 2,11,000 'கிலோவாட்' மின் சக்தியை உற்பத்தி செய்யவும் ஆண்டொன்றுக்கு 70 000 டன் யூரியா, நைட்ரேட், சல்பேட் போன்றவை உற்பத்தி செய்யவும் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்திற்கு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 52 கோடி ஒதுக்கப்படுமென்றும், மேலும் திட்டத்தின் வருடாந்திர அபிவிருத்தியைக் கவனித்து அதிகப்படியான உதவிகள் தரப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிகமாக நிதி ஒதுக்க இயலாதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சிறு ரக, குடிசைக் கைத்தொழில்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி ஒதுக்கப்பட்டிருந்த தொகையான ரூ. 200 கோடிக்குப் பதிலாக ரூ. 260 கோடியாகுமென்று திட்டக் குழு உறுப்பினர் ஜே. சி. கோஷ் தெரிவித்திருக்கிறார்.

நிர்வாகத் துறையைப் பொறுத்த வரையில் ரூ. 260 கோடிக்கும் அதிகமாக இத்துறையில் நிதி ஒதுக்குவது இயலாதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கைத்தறிப் பட்டுத் துணி நெசவாளர் சங்கம்

ஆரணியில் ஏற்படுத்தப்படும்

சென்னை, ஆக. 2—

ஆரணியில் (வ. ஆ.) கைத்தறிப் பட்டுத் துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க சர்க்கார் அனுமதித்துள்ளனர்; துவக்கத்தில் 100 நெசவாளர்கள் இதில் சேர்க்கப்படுவர்; இதற்காகக் கடனாகவும் — மானியமாகவும் ரூ. 70,000 அளிக்க சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

ஆந்திரக் கடற்கரை மணற்பரப்பில் கனிப்பொருள் கிடைக்கிறதாம்!

மாநிலங்கள் சபையில் பிரதமர் நேரு தகவல்

புதுடில்லி, ஜூலை 31—

ஆந்திர மாநிலத்தின் கடற்கரையோர மாவட்டங்களிலுள்ள மணற்பரப்புகளில், 'தோரியமும்' குறைந்த அளவு 'யுரோனியமும்' கலந்த 'மோனேசைட்' கனிப்பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்ற தகவலை, பிரதமர் நேரு, மாநிலங்கள் சபையில் வெளியிட்டிருக்கிறார்.

தற்போது திரு-கொச்சி மாநிலத்தில் தேவையான அளவுக்கு அதிகமாக 'மோனேசைட்' கிடைப்பதால் இங்கு கிடைக்கும் இக்கனிப் பொருள்கள் தேவைப்படவில்லை என்றும், என்றாலும் அங்கு எவ்வளவு அதிகமான 'மோனேசைட்' ஸ்டாக்குகள் கிடைக்குமென்பதையும், அவைகளை எந்த முறைகளில் பயன்படுத்துவது குறித்தும் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும், அந்த ஆராய்ச்சிகளில் பெரும்பாலானவற்றை, ஆந்திரப் பல்கலைக் கழக மாணவர்களே மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பீகாரிலும்கூட குறைந்த அளவு யூரேனிய கனிப் பொருள் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார் பிரதமர்.

371 நாகர்கள்தான் பலியாயினராம்!

நாகர் கிளர்ச்சியை ஒடுக்க முயன்ற நடவடிக்கையில் நாகர்களில் 371 பேர் மாண்டனரென்றும், காயமடைந்தவர்கள் எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லையென்றும் மக்கள் சபையில், உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் கூறியுள்ளார்.

சர்க்கார் தரப்பில் 68 பேர் இறந்திருப்பதாகவும், 234 பேர் காயமடைந்ததாகவும் அவர் தகவல் தந்துள்ளார்.

ஆந்திர கம்யூனிஸ்டுகள் விலகுகின்றனராம்!

300 பேர் காங்கிரசில் சேர்ந்துவிட்டனராம்

ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து ஏராளமான பேர் விலகிக் கொண்டு வருகிறார்களென செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்கு கோதாவரி மாவட்டத்தில் எலூரு என்ற இடத்தில் 300 கம்யூனிஸ்டுகள் கட்சியிலிருந்து விலகி காங்கிரசில் சேர்ந்துவிட்டனராம்!

நெல்லூரில் 200 கம்யூனிஸ்டுகள் இராஜிநாமா கொடுத்துவிட்டதாகவும், அவர்கள் காங்கிரசில் சேர முயற்சித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

குண்டூர், கிருஷ்ணா மாவட்டங்களிலிருந்தும், விரைவிலேயே பல கம்யூனிஸ்டுகள் விலகிவிடக்கூடுமாம்!

கழகச் செய்திகள்

திருச்செந்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

22—7—56 இரவு 7 மணிக்கு, தோழர் ஆ. நல்லகண்ணு தலைமையில் நடைபெற்றது தோழர்கள் இராசு. தங்கப்பழம், எஸ் நடராசன், கே ஆர். பி மணிமொழியன் ஆகியோர் பேசினர்.

சங்கரநயினர்கோவில் தி. மு. கழகம்

சங்கரநயினர்கோவில் நகர தி. மு. கழக செயற்குழுவின் அவசரக் கூட்டம் 27-7-56 பிற்பகல் 1-மணிக்கு துணைச்செயலாளர் இல்லத்தில், தோழர் டி. ஆர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது, இவ்வட்டத்தில் சொற்பயிற்சி மன்றம் உடனடியாக அமைப்பதென முடிவு செய்யப்பட்டதுடன், மற்றும் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

புவனகிரியில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

28—7—56 மாலை புவனகிரி தி. மு கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம், தோழர் இரா. சேதுராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இ இராமகிருஷ்ணன், பாலகுருசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தேர்தலில் தி. மு கழகம் ஈடுபடுவதை விளக்கிப் பேசினர்.

பின்னர், விலைச்சந்தி புருத்தும் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.

கொட்டாரக்குடியில் தி. மு. கழக துவக்க விழா

30—7—56ல், இவ்வூரில் தோழர் இரா. சந்தானம் தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, பாண்டியன், கோவிந்தராசன், ஆனந்தன் மற்றும் இயக்கத் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

பொள்ளாச்சியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

28—7—56 மாலை, வள்ளுவர் திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் பி. என். இராமானுசம் தலைமையில நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், 'தி. மு கழகமும்—தேர்தலும்' என்ற தலைப்பில், தோழர் கி. மனோகரன் பேசுகையில், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டது குறித்தும், இரண்டாவது திட்டத்திலும் தென்னாட்டுக்கு சரியான பங்கு கிடைக்கவில்லை என்றும், நாட்டு நலனில் அக்கரை கொண்டுள்ள மற்ற மாநில முதலமைச்சர்கள் தங்கள்மாநிலங்களுக்கு ஏற்பபங்கினைப் பெறுவதற்குஆவன செய்கிறார்கள் என்றும், ஆனால், இம்மாநில முதலமைச்சரோ, இருக்கின்ற சலுகைகளை விட்டுக்கொடுத்துவிட்டு இளித்தவாயன் பட்டத்தைப் பெற்றுவிட்டாரென்றும் குறிப்பிட்டுவிட்டு, தற்கால அரசியல் நிலை குறித்தும் நீண்டநேரம் பேசினார்.

தேர்தல் நிதிக்காக உண்டியல் வசூல் மூலம் ரூ. 4—8—0 வசூலிக்கப்பட்டது.

தளவாய்புரம் தி.மு. கழகம்

28—7—56 இரவு 8 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளர் மு. நா. இராமசாமியின் விலகுதலை ஏற்றுக்கொண்டபின், செயலாளராக மா. முத்துசாமி; துணைச் செயலாளராக த. சௌந்தரபாண்டியன்; பொருளாளராக ச. நாகரத்தினம்; மாவட்ட உறுப்பினராக பா. பாலப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

மேலாலத்தூர் தி. மு. க.

29-7-56 மாலை5மணிக்கு மேலாலத்தூர் தி. மு. கழக நிர்வாகக் குழு கூட்டம், தோழர் இ. ரா. சாரங்கபாணி தலைமையில் நடைபெற்றபோது; ஆகஸ்டு கடைசி வாரத்தில் கழகத் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டதுடன், இயக்கத் தோழர்களான வி. என். இராமலிங்கன் மேல்முட்டுக்கூர் பஞ்சாயத்து போர்டு தலைவராகவும், கே. எம் அரங்கசாமி, வைகுக்கண்ணு பஞ்சாயத்துபோர்டு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுதலும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

குடந்தை தி. மு. கழகம்

29—7—56 காலை 10 மணிக்கு, 'அண்ணா அரண்மனை'யில் கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு கருணாநிதி, மனோகரன் கூட்ட வரவு-செலவுகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. விரைவில் பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கரூர் நகர தி. மு. கழகம்

29—7—56 மாலை 4 மணிக்கு, கரூர் கருணாநிதி நாடக மன்றக் கட்டிடத்தில், தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கரூர் மில்ஸ் தொழிலாளர்களால் நடத்தப்பட்டுவரும் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத் துணைத் தலைவர் தோழர் வி. சுப்பிரமணியம் அவர்களின் தகப்பனார் இயற்கை எய்தமைக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், 19—8—56ல் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மோகனூர் தி. மு. கழகம்

29—7—56 மாலை 3 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் கே. எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் புதிதாக உறுப்பினர்கள் சேர விண்ணப்பித்துக்கொண்டவைகளை அங்கீகரித்தும், கழகக் கொள்கைகளைப் பரப்ப நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவதெனவும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருச்செங்கோடு தி. மு. க.

28—7—56 மாலை 7 மணிக்கு, திருச்செங்கோடு தி. மு. கழகச் சார்பில், இவ்வூர் 40 கால் மண்டபத்தின் முன்னிலையில் ஓர் பொதுக்கூட்டம் வழக்கறிஞர் எஸ். பி. சின்னையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வேலவன், சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்தும், பொதுத் தேர்தலில் நமது பங்கு என்பது பற்றியும் சுமார் 2 மணி நேரம் அரியதோர் விரிவுரையாற்றினார்.

திருத்தம்

'நம் நாடு' வெளியூர் 1-8-56-ம் நாள் இதழில் தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்தத் தோழர்கட்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேறியிருப்பதாக வெளியான செய்தியை—' தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயம் அடைந்து, பலத்த காயத்தால் நடமாட முடியாத நிலைமையில் இன்னும் படுக்கையில் இருக்கும் தோழர் இராமலிங்கம் அவர்கட்கு ஆத்தூர் தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது ' என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

திருவள்ளுவர் விழா

தலையாமங்கலம் :

29—7—56 மாலை 6 மணிக்கு தலையாமங்கலம்—மேலக்காடு பள்ளிக்கூடத்தில் ' திருவள்ளுவர் விழா ' திரு ஏ. ஏ. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. வி. செயராமன், பா. கேசவன் ஆகியோர் 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—புதுப்பேட்டை

29-7-56 மாலை 5 மணிக்கு சென்னை-புதுப்பேட்டை அண்ணா படிப்பகச் சார்பில், தோழர் சொ சி சந்திரோதயம் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது. 'வள்ளுவரும் நாமும்' என்பது பற்றி தோழர்கள் டி. ஞானசேகரன், டி. ஆறுமுகம், எஸ். சுந்தரம் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. முக்கியத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சென்னை 8-வது வட்டம்

திருவள்ளுவர் முத்தமிழ் கழகப் பணிமனையில், 29-7-56 காலை 9 மணியளவில், தோழர் கோ. கோபாலன் தலைமையில் திருவள்ளுவர் வாரம் கொண்டாடப்பட்டது தோழர்கள் அதியமான், அரங்கநாதன், ப. கண்ணப்பன், சேரலாதன், மா. நடராசன் ஆகியோர் பேசினர்.

கொழும்பு :

29-7-56 மாலை, கொழும்பு நாராயண குரு நினைவு மண்டபத்தில், இலக்கிய மன்ற ஆதரவில், தோழர் வி. எஸ். முருகன் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது.

தோழர்கள் டி. எம். பீர்முகமது, ஆதி கருப்பையா, கோசுதா, பி எஸ் ஏ. கனி, எம். முக்தார், மு கா. இராசன், கருணாநிதி, மணவைத் தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் பீர் முகம்மது, தமிழ் நாட்டினுடையவும் தமிழ் நாகரீகத்தினுடையவும் சிறப்புகளை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், முச்சங்கங்களின் பெருமையினை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

இரு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏனாதி :

30-7,56 மாலை 6 மணிக்கு, இவ்வூர் பன்னீர்செல்வம் நூலகத்தின் சார்பில், வள்ளுவர் விழா தோழர் மு. வீரையன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் பரப்பு வெங்கடாசலம், இராமசாமி, குமாரசாமி ஆகியோர் இன்னிசைக்குப் பிறகு, தோழர்கள் இறை முதலவனார், சிவானந்தம், தனிக்கொடி ஆகியோர் திருக்குறளின் சிறப்பைக் குறித்தும், திருவள்ளுவர் பற்றியும் விரிவுரையாற்றினர்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

வைகளைச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

"தற்காலிக நியமனம் பெற்ற முதல் மூன்று மாதங்களில் வேலைக்கு நியமிக்கப்பட்டிருப்பவரின் தோற்றம், போக்கு, தகுதி ஆகியவைகளைப் பார்த்து, அவர்களுடைய சாதனைகளுக்கு மார்க்குகள் அளிக்கப்படவேண்டும். ஏற்கனவே அவர்கள் பெற்ற மார்க்குகளுடன் சேர்த்து அவருடைய தகுதி வரிசைக் கிரமம் கணிக்கப்படும்."

நன்றி அறிவிப்பு

தமது தகப்பனார் இயற்கை எய்தியமை குறித்து அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்களுக்கும், அன்று சவ ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கடலூர் தோழர் எஸ். அஜீஸ் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

முகவரி

புலவர் அறிவுடைநம்பி,
அ. வள்ளியப்பா வீதி,
புதுவலைவு, பாகனேரி (அஞ்சல்)
இராமநாதபுரம் மாவட்டம்

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து...!



இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் வன்னியசிங்கம் அவர்கள், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்.

சர்க்கார் ஊழியர் பதவிகளுக்கு பட்டப் படிப்பு அவசியமா?

மாநிலங்களின் முடிவு தெரிந்த பின்பே மத்திய சர்க்கார் முடிவு செய்யுமாம்

புதுடில்லி, ஜூலை 31—

"அரசாங்க குமாஸ்தா வேலைகளுக்கும், கீழ் அதிகாரிகள் வேலைகளுக்கும் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு வேண்டாம். ஆனால் அரசாங்க உயர்தர நிர்வாக வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருக்கவேண்டும்."

அரசாங்க வேலைகளுக்கு பட்டப் படிப்புத் தேவையா? அப்படியானால் எந்தெந்த வேலைகளுக்கு?' என்பது பற்றி ஆராய ஏப்ரல் மாதம் ஒரு குழு நியமிக்கப்பட்டதல்லவா? அந்தக் குழுவின் பெரும்பான்மை சிபாரிசு மேற்கண்டவாறு கூறுகிறது.

அண்மையில் இக்குழு, தன்னுடைய அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தச் சிபாரிசுகளை மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களுக்கு அனுப்பியுள்ளது. இது பற்றி மாகாண அரசாங்கங்களின் கருத்துத் தெரிந்த பிறகு மத்திய அரசாங்கம் ஒரு முடிவு செய்யும்.

பெரிய அதிகாரிகள் பதவிகளும், நிர்வாகத் துறையின் பதவிகளும் அகில இந்திய நிர்வாகத் துறைக்கும், மத்திய—மாகாண அரசாங்கங்களின் முதல் பிரிவு பதவிகளுக்கும் உட்பட்டது. இப்பதவிகளில் உள்ளவர்கள் முக்கியமான முடிவை மேற்கொள்ளவேண்டியிருக்கும்; அதோடு அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். குமாஸ்தா பதவியின் வேலைகள் எல்லாம் சாதாரணத் தன்மையில் உள்ளவையே. இவைகளைத் தவிர பாக்கியுள்ளவைகள் அனைத்தும் சிறிய (ஜூனியர்) அதிகார பதவிகள் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவையே.

பெரிய அதிகாரிகளின் பதவி—பெரிய நிர்வாகப் பதவிகளுக்கு, பட்டதாரிகள் மட்டுமே மனுச் செய்துகொள்ள வேண்டுமென்று இக்குழு கருதுகிறது.

இப்பதவிகளுக்குத் தேவைப்படுகிற பண்புகள் எல்லாம் பட்டதாரிகளிடம் இயற்கையாகவே அமைந்திருக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது இப்பதவிகளுக்கு மனுச் செய்துகொள்கிறவர்கள் 21 வயதுக்கும் 23 வயதுக்கும் இடையே இருக்கவேண்டும்; ஆனால் சிறிய அதிகாரிகள் பதவிகளுக்கு ஆட்களை எடுப்பதில் பட்டப் படிப்புதான் குறைந்த அளவு தகுதியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாதென இக்குழு கருதுகிறது.

" இப்பதவிகளுக்கு நடக்கிற போட்டித் தேர்வுகளில் பட்டதாரிகளையும் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும்; இப்பதவிகளுக்கு மனுச் செய்துகொள்கிறவர் 19 வயதுக்கும் 21 வயதுக்கு மிடையே இருக்கவேண்டும்.

" குமாஸ்தா வேலைகளுக்குப் பட்டப்படிப்பு வேண்டுமென்று நிச்சயமாக வற்புறுத்தக் கூடாதென்று இக்குழு கருதுகிறது. ஆனால் இப்பதவிகளுக்குப் பட்டப் படிப்பு படித்தவர்கள் வருவதைத் தடை செய்யக் கூடாதென்றாலும்கூட, இப்பதவிகளுக்குப் பட்டதாரிகள் வருவதைக் குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இக்குழு எண்ணுகிறது.

"புதிய கல்வி முறையின்கீழ் 20 வயதுக்கு முன்பு பட்டம் பெறுவதென்பது சாத்தியமற்றதென்றே இக்குழு கருதுகிறது. அதனால் இப்பதவிகளுக்குப் பட்டதாரிகள் மனுச்செய்து கொள்ளாமல் தடுக்க இவைகளுக்கு மனுச்செய்து கொள்கிறவர்கள் 17 வயதுக்கும் 19 வயதுக்குமிடையே இருக்க வேண்டுமென்று இக்குழு யோசனை கூறியிருக்கிறது.

"குமாஸ்தா வேலைகளின் பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ள நிலவருமான, இரயில்வே, போக்குவரத்துபோன்ற துறைகளின் சில தொழில் நுணுக்க பதவிகளுக்கு மேலே குறிப்பிட்டுள்ள வயது வரம்பிற்கு உட்பட்டவர்களை தேர்ந்தெடுத்து, இவர்களுக்கு நீண்டகால அளவில் போதுமான பயிற்சியை அளிக்கவேண்டுமென்று இக்குழு சிபாரிசு செய்கிறது. இப்படிப் பயிற்சி அளித்தால்தான் தங்களுடைய கடமைகளை மனநிறைவளிக்கும் வழியில் நிறைவேற்ற முடியுமென்றும் இக்குழு கருதுகிறது.

"இந்த மூன்று வகைப் பிரிவைச்சேர்ந்த பதவிகளுக்கும் தேர்ந்தெடுக்க நல்லதரமான தேர்வுகள் நடத்தவேண்டும்; விரிவான அடிப்படையில் இந்தத் தேர்வுகள் நடைபெறவேண்டும்; வேலைக்குப் போட்டியிடுபவர்களின் நினைவாற்றல், அவர்களுக்குத் தெரிந்த விடயங்கள் ஆகியவைகளைக் காட்டிலும் அவர்களின் திறமையைச் சோதிக்கக்கூடியதாக இந்தத் தேர்வுகள் இருக்கவேண்டும்; பி. ஏ. [ஆனர்சு] அடிப்படையிலேயே உயர் பதவிகளுக்கு தேர்வுகள் நடைபெறவேண்டும் ; இந்தத் தேர்வுகளில் குறைந்தது இரண்டு பொருள்களையாவது தேர்ந்தெடுக்க வேண்டும் என நிபந்தனை இருக்கவேண்டும் ; பகுத்தறிவுடன் சிந்திக்கும்திறமை, அறிவுத் திறன், நல்லதைக்கெட்டதைத் தேர்ந்தெடுக்கும் இயல்பு. புதிதாக ஒன்றைச் சிந்திக்கவும் எழுதவும் உள்ள திறமை ஆகிய

(8-ம் கலம் பார்க்க)

அவதியுறும் நிலை இனி நீடிக்காது?

சென்னை—பர்மா கப்பல் போக்கு - வரத்து மீண்டும் இத்திங்கள் ஆரம்பமாகிவிடுமாம்!

மக்கள் சபையில் மந்திரி அழகேசன் தகவல் தருகிறார்

புதுடில்லி, ஆக. 2—

சடந்த ஆண்டில் இந்தியாவுக்கும்—பர்மாவுக்கும் இடையே நடைபெற்றுவந்த 'சிந்தியா கம்பெனி'யின் கப்பல் போக்கு – வரத்து நிறுத்தப்பட்டதும், அது நிறுத்தப்பட்டதினால் பல பிரயாணிகள் அவதிப்பட்டதும் அறிந்ததே. மீண்டும் அந்தக் கப்பல் போக்கு வரத்து, இந்தத் திங்கள் இறுதியில் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது.

இந்தத் தகவலை, மத்திய சர்க்கார் துணை போக்கு-வரத்து அமைச்சர் ஒ. வி. அளகேசன் மக்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது அறிவித்திருக்கிறார்.

இத்திங்கள் 15-ந் தேதி முதல், கிழக்கத்திய கப்பல் போக்கு-வரத்துக் கார்ப்பொரேஷன் நிறுவனத்திற்கு பொது அதிகாரி ஒருவர், 'மானேஜிங் டைரக்டர்' என்ற பதவியில் அமர்த்தப்படுவார் என்றும், சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாரிடமிருந்து மானேஜிங் ஏஜென்சியைச் சர்க்கார் இத்திங்கள் 15-ந் தேதியன்று பெற்றுக்கொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

700 பள்ளி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

அஜ்மீர், ஆக. 1—

இராஜஸ்தான் மாநில சர்க்கார் உதவி பெறும் சுமார் 60 பள்ளியைச் சேர்ந்த சுமார் 700 ஆசிரியர்கள், சடந்த 6 மாதங்களாகத் தங்களுக்கு ஊதியம் தரப்படாததை எதிர்க்கும் முறையில் கால வரையறை இல்லாமல் வேலை நிறுத்தம் மேற்கொண்டிருக்கின்றனர்.

அந்த ஆசிரியர்கள் அனைவரும் வழக்கம்போல் வகுப்புகளுக்குச் சென்றாலும், பாடம் போதிக்கவில்லையாம்.

தங்கள் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களிடம், அவர்களுடைய குழந்தைகளின் கல்வி எவ்வகையிலும் பாதிக்கப்பட்டு விடாதபடி தாங்கள் கவனித்துக் கொள்வதாக உறுதி தந்திருப்பதாகவும், தங்கள் தகராறுகள் அனைத்தும் தீர்க்கப்பட்டான பின்னர், அவ்வாசிரியர்கள் அதிகப்படி நேரம் வேலை செய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம்

"5-8-56 பிற்பகல் 3-மணிக்கு திருச்சி திராவிடப் பண்ணை (9, கிலேதார் தெரு) யில் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பு :—எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைகளின் பொறுப்பாளர்களும், இதையே அழைப்பாகக் கருதி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்,"

என்று திருச்சி மாவட்ட தி. மு. க செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அறிவிக்கிறார்.

சேது சமுத்திரத் திட்ட சிபாரிசுகளை டில்லி ஏற்றுக்கொள்ளவில்லை?

தொழில் நுணுக்க ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறதாம்

மக்கள் சபையில் கேள்விக்கு அழகேசன் தரும் பதில்

புதுடில்லி, ஆக. 2—

"சேது சமுத்திரத் திட்டத் துணைக் குழு தந்துள்ள சிபாரிசுகளை மத்திய சர்க்கார் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை,"

என்று, துணை போக்கு-வரத்து அமைச்சர் ஒ. வி. அளகேசன், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இறுதியான முடிவுகள் மேற்கொள்ளப்படுமுன், அங்கு சில தொழில் நுணுக்க ஆராய்ச்சிகள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுவதாகக் கருதப்படுவதாகவும், இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இப்போது பரிசீலிக்கப்பட்டுவருகின்றன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திட்டப் பகுதியில் ஒரு கால்வாய் வெட்ட வேண்டுமென்றும், அக்கால்வாய் மூலம் கப்பல் போக்கு-வரத்து நடத்தலாமெனவும் அக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

திட்டத்தின் மதிப்பீடு ஏறத்தாழ ரூ 10 கோடி என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் தேவை'

'அம்பர் சர்க்கா' விசாரணைக் குழு கருத்து

புதுடில்லி, ஆக. 2—

"அம்பர் சர்க்காக்கள், உணவுக்கு அடுத்தபடியாகத் தேவைப்படும் பொருட்களைத் தயாரிப்பது சாத்தியமானதே என்பதை சந்தேகத்திற்கிடமில்லாதபடி தெரிவிக்கின்றன; குறிப்பாகக் கிராமங்களில் இலாபகரமான தொழில்கள் ஏற்படுத்தவும் அவை உதவியாயிருக்கும்,"

என்று, இவ்வாண்டு மார்ச்சுத் திங்களில் மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட அம்பர் சர்க்கா விசாரணைக் குழு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

அம்பர் சர்க்காக்களின் பொருளாதார, தொழில் நுணுக்கத் துறைகளிலெல்லாம் ஆய்ந்து முடிவு செய்த பின்னர் குழு, "அம்பர் சர்க்காக்கள் நல்ல இலாபந் தரக் கூடியவையாக இருந்தபோதிலும் கூட, தொழில் பகுதிகளிலும், தலைமை இடங்களிலும் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளும், சர்வ ஜாக்கிரதையான நிர்வாக அமைப்புகளும் தேவைப்படுகின்றன" என்று கருதுகிறதாம்.

இலங்கைவாழ் உரிமை மறுக்கப்பட்ட பின்........

இந்தியக் குடிஉரிமை கோருவோர் மனுக்கள் 'கதி' என்ன?

புள்ளி விவரம் தர இயலாமைக்கு இந்தியப் பிரதமர் கூறும் காரணம்

புதுடில்லி, ஆக. 1—

"இலங்கைக் குடிஉரிமை கோரி இந்தியர்கள் சமர்ப்பித்திருந்த 19,378 மனுக்கள் 1956 ஜனவரி—ஏப்ரல் கால அளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது" என்று, மக்கள் சபையில், பிரதமர் நேரு கூறிவிட்டு, மேலும் சொன்னார் :—

"இதுவரையும் 41,312 பேர் இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். 2,62,509 பேர் சம்பந்தப்பட்ட 81,950 மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. 1,55,084 மனுக்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன."

இதுவரையில் இலங்கைக் குடிஉரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டபின், இந்தியக் குடிஉரிமை அளிக்கப்பட்ட இந்தியர்கள் எண்ணிக்கை பற்றி அவர் குறிப்பிட்டதாவது :—

"மனுதாரர்கள் தாங்கள் இலங்கைக் குடி உரிமை கோரி சமர்ப்பித்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கத் தயங்குகிறபடியால், அவர்கள் சம்பந்தமாய்த் துல்லியமான புள்ளி விவரங்கள் தருவதற்கு இயலவில்லை. ஆயினும், 1956 ஜூன் 30-ந் தேதி வரையில் 193 பேர் தங்கள் மனு நிராகரிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களில் 51 பேர் இந்தியக் குடி உரிமை கோரி சமர்ப்பித்திருந்த மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன; மீதி பரிசீலனையிலிருக்கின்றன."

ஓட்டல் தொழிலில் பயிற்சியளிப்பதற்கான பள்ளியொன்றைத் திறந்து வைப்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறதென்றும், அது எப்பொழுது வேலை துவங்குமென்பது பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் கூறுவது சாத்தியமில்லையென்றும் மத்திய துணை போக்குவரத்து மந்திரி மக்கள் சபையில் கூறியுள்ளார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 6—8—56 மாலை 3-மணிக்கு சேலம், கோயம்புத்தூர் லாட்ஜ், சாந்திநிகேதனில் நடைபெறும். எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாது வரவேண்டுகிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மு. க துணைச்செயலாளர் பி. இராமலிங்கம் அவர்கள் அறிவிக்கிறார்.

சிறப்புக் கூட்டம்

5—8—56 காலை 10-மணியளவில், மதுரை பழனி டாக்கீசில், தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் 'எதிர்ப்புகள்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

புதுப்பட்டி தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம்

6—8—56 காலை 10 மணியளவில், இராசிபுரம் வட்டம்—புதுப்பட்டி தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் பொதுமக்கள் திருவள்ளுவர் கலை மன்றத்தில் நடைபெறும்.

அறிவிப்பு

★

எனது தொழில் சம்பந்தமாக நான் ஏற்றிருக்கும் முக்கிய பொறுப்புகளை சிறப்பான முறையில் நிறைவேற்றவேண்டியிருப்பதால் இன்னும் ஒரு சில மாதங்களுக்கு நாடகங்களிலோ, பொதுக்கூட்டங்களிலோ, சிறப்புக் கூட்டங்களிலோ அல்லது அதுபோன்ற வேறு நிகழ்ச்சிகளிலோ கலந்து கொள்வதற்கில்லை. ஆகையால் எனது மறு அறிவிப்பு வரை அன்பர்கள் என்னை மேலே குறிப்பிட்டுள்ளவைகளுக்கு அழைக்க வேண்டாமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

எம். ஜி. இராமச்சந்திரன்,
160, லாயிட்ஸ் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை-14

கழகக் கூட்டம்

★

அம்மாப்பேட்டை-சேலம் :
5—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
கே. எஸ். கோவிந்தன்
பேசுவோர் :
எம். எஸ். இராமசாமி
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

வேடசந்தூர் :
(மதுரை மாவட்டம்)
மாரியம்மன் கோவில் முன்பு
6—8—56 மாலை 6-30 மணிக்கு
தலைவர் :
எஸ். முத்து
பேசுபவர் :
கி. மனோகரன்

★

மாயூரம் :
திருவிழந்தூர் கடை வீதியில்
5—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
அ அண்ணாமலை
பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

"12—8—56 காலை 9-30 மணிக்கு, தஞ்சாவூர் நாடார் தோட்டத்தில் தஞ்சை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் மாவட்டச் செயலாளரால் கொணரப்படும் பல தீர்மானங்கள் குறித்து ஆய்வுரைகள் வழங்கி கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, தஞ்சை மாவட்ட தி. மு க. செயலாளர் தோழர் என். எஸ் இளங்கோ அவர்கள் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

4—8—56 மாலை 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல்மண்டபம் நகரசபை ஆண் பள்ளியில், திரு அ. ஞானசுந்தரம் அவர்கள் குறளில் 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்திற்கு பொருள் கூறி விரிவுரையாற்றுவார்.

ரூனை நகர இளைஞர் கழகம்

4—8—56 மாலை 6-30 மணிக்கு 10, மாணிக்க செட்டித் தெரு, கழக மனையில், திருவள்ளுவர் நினைவு நாளை யொட்டி, புலவர் திரு. இரா. சொக்கலிங்கம் 'திருவள்ளுவர்' என்பது பற்றிப் பேசுவார்.

பேராசிரியர் இருதயராஜ் படிப்பக பொது உறுப்பினர்கள் கூட்டம்

5—8—56 இரவு 8 மணிக்கு, உறையூர்—திருச்சியிலுள்ள மேற்படி படிப்பகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது படிப்பகத்தின் வளர்ச்சி குறித்து ஆலோசனை செய்யப்படும்.

பெரிய கொல்லப்பட்டியில் தி. மு. கழக துவக்க விழா

5—8—56 இரவு 7 மணியளவில், சாத்தூருக்கு அருகிலுள்ள பெரிய கொல்லப்பட்டியில், அழகிரி திடலில், தோழர் எஸ். கலிங்கன் தலைமையில், தி. மு. கழகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் மு வசனப்பித்தன், இரா. இராமச்சந்திரன் பேசுவர்.

பனப்பாக்கம் பிர்க்கா விவசாயிகள் சங்கம்

5—8—56 மாலை 4 மணிக்கு, திருமால்பூர் கிராமச் சாவடிக்கு அருகில், திரு கி. மு இராமலிங்க முதலியார் தலைமையில், பனப்பாக்கம் பிர்க்கா விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தை தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் துவக்கிவைத்துப் பேசுவார்.

திருவள்ளுவர்-புத்தர் விழா

5—8—56 மாலை 4 மணிக்கு, ஆம்பூர் இந்து உயர்நிலைப் பள்ளியில், திரு. எம். நடேசன் தலைமையில், மேற்படி விழாக்கள் நடைபெறும். திருவாளர்கள் எஸ். பொன்னுசாமி, எஸ் பரமசிவம், என் ஆர். சுந்தரநாதன், ஏ மணி எழிலன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

4—8—56 இரவு 7 மணிக்கு, திரு. ஆ ருக்மாங்கதன் தலைமையில், தோழர்கள் மு. வ. வேலன், ஏ ஆண்டவன், வே. அன்புமணி, ஆ. தனபால், அ இராசேந்திரன் ஆகியவர்கள் 'அறிவியக்கமும், காங்கிரசும்' என்ற தலைப்பில், சென்னை—27-வது வட்டம், எண் 33, எலா கந்தப்பன் வீதி, அறிவியக்க மன்றப் பணிமனையில் பேசுவர்.

* * *

5—8—56 காலை 9 மணிக்கு, சென்னை—3-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் என். இராமதாஸ் தலைமையில், 'மறுமலர்ச்சி' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

எலப்பாக்கம் தி. மு கழகச் சார்பில், 6—8—56 மாலை 5 மணிக்கு, கா. சு. தனபாலன் தலைமையில் தோழர்கள் பொன்னம்பலம், கார்த்திகேயன், இராசரத்தினம் திருஞானசம்பந்தன், குமாரசாமி ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

* * *

5—8—56 காலை 10 மணிக்கு, பெங்களூர்—அலசூர் முயற்சி மன்றத்தில், திரு. இரா. கோபால் தலைமையில் 'குறளறம்' எனும் பொருளில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். மன்றத் தோழர்கள் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.